

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து: ஊழலுக்கு "இல்லை" என்போம்:** பொருள், அரசியல் அல்லது ஆன்மீக சக்தியுடையோர் எந்த வித ஊழல் கவர்ச்சியையும் எதிர்த்திட வேண்டுமென்று

**பிப்ரவரி மாத கரு : கிறிஸ்துவில் நாம் குணமானோம்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 18 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | தவக்கால 1ஆம் ஞாயிறு<br>தவக்கால 1ஆம் ஞாயிறு<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |
| பிப் 19 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| பிப் 20 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| பிப் 23 வெள் | மாலை 7.30 | சிலுவைப்பாதை (த, ஆ)/ திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| பிப் 24 சனி | காலை 6.30 | திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| பிப் 25 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை 11.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம) | தவக்கால 2ஆம் ஞாயிறு<br>தவக்கால 2ஆம் ஞாயிறு<br>தவக்கால 2ஆம் ஞாயிறு |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| பிப் 18 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 4.00- 6.30<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>பெர். மையம்<br>ஜெலாப்பாங் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி<br>இறைவனுடன் ஆன்மீக தொடர்பை உருவாக்குதல்<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய குழு கூட்டம் |
| பிப் 19 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| பிப் 20 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு<br>5-திசைகள் பிறரன்பு திட்டங்கள்-அனைத்து தொகுதி& திசை தலைவர்கள் |
| பிப் 21 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 1-3 | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>பெற்றோர் ஆதரவுக்குழு கூட்டம் |
| பிப் 22 வியா | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-2<br>பெர். மை 1-3 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA<br>புலூமா மகளிர் குழு கூட்டம் |
| பிப் 24 சனி | மாலை 5.30/6.00 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| பிப் 25 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 7.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி<br>அவே, கிஅ சிற்றாலயம் & ஆங்கில பாடல்குழு பயிற்சி |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 17 மார்ச் 2018 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**2. பயனளிக்கும் மேடைப்பேச்சும், அதனைப் படைக்கும் திறன்களும்:** இது ஒரு 3 பாக உருவாக்கப் பயிற்சியாகும். இதன் வழி திறமைகளைப் பரிமாறி ஆற்றல் மிக்க பேச்சாளராகவும், பயனளிக்கும் பகிர்வுகள், படைப்பு திறன், தொடர்புத் திறன் ஆகியவற்றை மேம்படுத்தவும் பயிற்சியளிக்கப்படும். திட்டத்தின் முதல் பகுதி 24/2/18 (காலை 9.00-மதியம்1.00 வரை) நடைபெறும். இந்த அமர்வு எல்லா பங்கு கற்பிக்கும் குழு உறுப்பினர்களுக்கும் கட்டாயமானது. இதில் ஆர்வமுள்ள பங்கு மக்களும் பங்கேற்கலாம். தயவு செய்து உங்கள் பெயரை பங்கு அலுவலகத்திலோ/ புலனம் வாயிலாக ரமேஸ் (016-5662866) அவர்களுடனும் பதிவு செய்யலாம்.

**3. புகுமுக தேர்வுச் சடங்கு:** 13 முதியோர் திருமுழுக்கு வேட்பாளர்கள் புகுமுக தேர்வு சடங்கில் கலந்துக் கொள்வார்கள். **நாள்:** 25 பிப் 2018 (ஞாயிறு) **நேரம்:** மாலை 5.30 **இடம்:** புனித மைக்கல் ஆலயம், ஈப்போ.

**4. பினாங்கு மறைமாவட்ட இளைஞர் தினம் (PDYD 4): நாள்:** 16 ~ 17 ஜூன் 2018 (சனி & ஞாயிறு) **நேரம்:** மதியம் 12.00~ மதியம் 12.00 **இடம்:** கிறிஸ்து அரசர் ஆலயம், சுங்கை பெத்தானி. **ஒருமை பகிர்வு:** ரிம 50/-. **பதிவுக்கு இறுதி நாள்:** 31/3/18. **தொடர்புக்கு:** பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851) **மின்னஞ்சல்:** pdyn@pgdiocese.org

**5. அமைதிக்கான செபம் மற்றும் நோன்பு நாளாக 23 பிப் 2018ஐ அனுசரிக்க பாப்பரசர் அழைப்பு:** பாப்பரசர் பிரான்சிஸ் போரினால் பிளவுண்ட நாடுகளுக்காக, குறிப்பாக நீடித்த சச்சரவினால் துன்புறும் கோஸ்கோ மக்கள் குடியரசு, தென் சூடான் ஆகியவற்றின் அமைதிக்காக செபிக்கவும், நோன்பிருக்கவும் ஒரு சிறப்பு நாளை தொடங்கி அதில் சமய பேதமின்றி எல்லா ஆண்கள், பெண்களையும் பங்கேற்க அழைக்கிறார். 23 பிப் 2018 அமைதிக்காக செபம் மற்றும் நோன்பு சிறப்பு நாளில் நல்லெண்ணமுள்ள எல்லா ஆண்கள் பெண்களையும் இணைந்துக்கொள்ள திருத்தந்தை வலியுறுத்துகிறார்.

**6. அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்:** 11/3/18 (ஞாயிறு) காலை 10.30 ~ மதியம் 1.00 வரை புலூமாவில் நடைபெறும். பதிவுகள் ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் நடைபெறும்.

**7. திருநிலைப்பாட்டிற்கான முந்தைய அறிவிப்புகள்:** பின்வரும் வேட்பாளர் சந்தனசாமி பீட்டர், 3/3/18 (சனி), காலை 10.00க்கு ஈப்போ, புனித லூர்து அன்னை தேவாலயத்தில் திருமணமான நிரந்தர திருத்தொண்டராக ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ், D.D. அவரின் தலைமையில் திருநிலைப்படுத்தப்படுவார். இந்த திருநிலைப்பாட்டிற்கான முன்னறிவிப்புகள் திருச்சபை சட்டம் எண் 1051 2$^{0}$ இதனை நிறைவு செய்கிறது. கத்தோலிக்கர்கள் யாருக்காவது வேட்பாளரைப் பற்றி ஏதேனும் தடங்கல்கள் அல்லது ஆட்சேபம் இருந்தால் அவர் திருப்பொழிவு செய்யப்படுவதற்கு முன்பாக ஆயரை தொடர்பு கொண்டு உடனடியாக தெரிவியுங்கள்.

**8. திருமணமாகாத கத்தோலிக்கருக்கான துணை தேடும் மையம்:** திருமணமாகாத கத்தோலிக்கருக்கான துணை தேடும் மையம் (பினாங்கு மறைமாவட்ட குடும்ப வாழ்வு பணிக்குழுவுடன் இணைந்தது) கீழ்கண்ட ஒரு தங்கும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்கிறது: **நாள்:** 9 ~ 11 மார்ச் 2018 (2 இரவுகள்/ 3 நாள்கள்) **இடம்:** புனித அன்னம்மாள் விடுதி, புக்கிட் மெர்தாஜாம் **கட்டணம்:** ரிம 200.00 (பகிர்ந்து தங்கும் அடிப்படையுடன், காலையுணவு, தேநீர் சிற்றுண்டி, மதிய உணவு & இராவுணவு உள்பட) **பதிவுக்கு இறுதி நாள்:** 23 பிப் 2018 **தொடர்புக்கு:** தெரேசா வான் (017-5788192/ 04-2610273) மின்னஞ்சல்: catholicdatinghub@gmail.com

**9. ரேச்சலின் திராட்சைதோட்ட ஒடுக்கம்:** பாதுகாப்பில் தங்கி வாழவும், கருக்கலைப்பின் வேதனைகளை கடவுளிடம் ஒப்புக்கொடுக்கவும், அங்கு மன்னிப்பு மற்றும் குணமளிப்பின் வாக்குறுதி உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும் ஓர் அழைப்பு. பினாங்கில் அடுத்த ஒடுக்கம் 16 ~18 மார்ச் 2018இல் நடைபெறும். நீங்களோ, உங்களுக்கு தெரிந்த யாராகிலும் கருக்கலைப்பினால் தொடப்பட்டிருந்தால் தயவு செய்து அந்தரங்க எண்கள் 016-4190538 சிரில்லா (இரவு 7-9 வரை) அல்லது மின்னஞ்சல்: healinggracerachelsvineyard@gmail.com வழி 6/3/18க்குள் தொடர்பு கொள்ளவும்.

**10. 24 மணி நேரம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அனுபவத்தில் வாழ்தல்- ஆண்டு 2:** SPM & அதற்கு மேல் முடித்தவர்களுக்கும் தனித்த இளைஞர்களுக்கும் பொதுவானது. இந்த நிகழ்வு இறைப் பணி மற்றும் குருத்துவ தேவழைத்தலை கண்டறிய ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. 3 ~ 4 மார்ச் 2018 மதியம் 1 மணி ~ மதியம் 1 மணி வரை புனித லூர்து அன்னை தேவாலயம், சிலிபின், ஈப்போ, பேராக்-ல் நடைபெறும். கட்டணம் இல்லை. தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தொடர்புக்கு: வின்சென்ட் ஜோசப் (04-2611350) அலுவலக நேரம் (திங்கள் - வெள்ளி)

**11. மண்டப சீரமைப்பு:** நமது லூர்து மண்டபம் வருந்தத்தக்க நிலையில் உள்ளது. நான் கடந்த ஆண்டு அறிக்கைத்தாளில் அறிவித்தப்படி நாம் மண்டபத்தை சீரமைக்க உள்ளோம். குளிரூட்டிகளுடன் புதிதாக சீரமைக்கப்பட்ட மண்டபம், பங்கு வருவாயை அதிகரிப்பதற்காக திருமணங்களுக்கும், மற்ற நோக்கங்களுக்காகவும் வாடகைக்கு விடப்படும். உங்களுக்கு ஏதேனும் கடுமையான, செல்லத்தக்க காரணங்கள் (நியாயமான எதிர்ப்புகள்) இருந்தால் கட்டுமான வேலை தொடங்குவதற்கு முன்பே, பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள். உத்தேச சீரமைப்பு திட்டம் பங்கு அறிக்கைப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கிறது.

**12. 2018க்கான பங்கு கருத்து:** "கருணை மற்றும் தன்னலமற்ற பணி"யை நாம் 2018க்கான கருத்தாக தேர்ந்தெடுத்துள்ளோம். இவ்வாண்டில் 5 பிறரன்பு திட்டங்கள் 5 திசைகளால் மேற்கொள்ளப்படும். அதிச தலைவர்களுடன் திசை தலைவர்கள் இணைந்து ஏற்பாடு செய்யும் இத்திட்டங்கள் பஒகு (PAT) மேற்பார்வையினாலும் உதவியுடனும் செயல்படுத்தப்படும். ஆண்டு இறுதி மதிப்பீடு இதையொட்டியே இருக்கும்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜனவரி 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **382,152.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **386,602.39** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

10 & 11/02/18 **திருப்பலி வசூல்கள்: மாலை 6.30** - RM 4,298.35 **காலை 9.00** - RM 1,816.30 **மொத்தம்** - RM 6,114.65

2017 - RM 120.00 2018 - RM 460.00 **மொத்தம்** - RM 580.00 **திருவிழா செலவிற்காக** - RM 4,065.75

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்